# பகவான் சொக்கநாதர் ஆலயம்

## சாந்திப்பிரியா



Imaginary view based on factual image

டோம்லூரில் உள்ள விமான நிலைய சாலையில், ஒரு சிறிய சந்தில் அமைந்து உள்ளது பகவான் சொக்கநாதசுவாமி ஆலயம் என்று அழைக்கப்படும் மிகப் பழமையான ஆலயம். இந்த ஆலயம் சாலைக்கு சற்றே மேல் தளத்தில் அமைந்து உள்ளது. அதன் சுற்று

வட்டாரத்தில் ஒரு காலத்தில் ஒரு முக்கிய கட்டிடமாக இருந்துள்ளது. இது சோழ மன்னர்களால் 10 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டுள்ள ஆலயம் ஆகும். சோழ மன்னர்கள் சிவ பெருமானுக்கு பல ஆலயங்களையும், பகவான் விஷ்ணுவின் சில ஆலயங்களையும் நிர்மாணித்து உள்ளார்கள். அவற்றில் ஒன்றே பெங்களூரில் உள்ள பகவான் சொக்கநாதர் ஆலயமும் ஆகும். சொக்கா என்பது பொதுவாக சிவ பெருமானை குறிப்பது , ஆனால் இந்த ஆலயத்திலோ பகவான் விஷ்ணு சொக்கநாதர் என்ற பெயரில் அமர்ந்திருக்கிறார். தெலுங்கில் சொக்கா என்றால் அழகானது என்பது பொருள். எனவே இங்கு அமர்ந்திருக்கும் இறைவன் அழகான கடவுள் என்கிறார்கள்.

இந்த ஆலயம் குறித்து கூறப்படும் ஒரு கதை இது. முன் ஒரு காலத்தில் இந்த ஆலயம் உள்ள இடத்தில் ஒரு பெரிய ரிஷி உள்ளூர்வாசிகளின் நலனுக்காக பகவான் விஷ்ணுவின் அருள் வேண்டும் என்பதற்காக தவத்தில் இருந்தார். அவர் தவத்தை மெச்சி அவருக்கு காட்சி தந்த பகவான் விஷ்ணு, அந்த ரிஷியிடம் தமக்கு ஒரு திவ்ய விக்ரஹத்தை (பிரதான சிலை) அங்கு ஸ்தாபிக்குமாறு கட்டளையிட்டார். அதன் மூலம் அங்கு வந்து தம்மை வழிபடும் மக்களுக்கு அருள் கிடைக்கும் என்றும் அவர்கள் மோட்ஷத்தை அடைவார்கள் என்று கூறினார். ஆனால் மக்கள் மரணத்திற்குப் பிறகு செய்யப்படும் இறுதி சடங்குகளை முறைப்படி செய்ய மறந்து விடக் கூடாது என்றார். அதன்படி, பகவான் விஷ்ணுவிற்கு மூல சிலையை அமைத்து அதன் மீது எல்லா நேரங்களிலும் எட்டு திசைகளிலிருந்தும் அகண்ட சக்திகளும், சூரியனின் ஒளியும் விழுமாறு அமைத்தார். இந்த ஆலயம் கிழக்கு நோக்கியே கட்டப்பட்டது, இதனால் உத்தராயணம் (பிப்ரவரி இறுதி முதல் மார்ச் முதல் வாரம் வரை) மற்றும் தட்சிணாயண (ஆகஸ்ட் இறுதி முதல் செப்டம்பர் முதல் வாரம் வரை) காலங்களில் சூரிய கிரணங்கள் மூல தெய்வத்தின் மீது விழும் வகையில் அமைந்து உள்ளது. பகவான் சொக்கநாதரை வேண்டி

அந்த ஆலயத்தை பிரதர்ஷணம் செய்பவர்களுக்கு பகவானின் பரிபூரண அருள் கிடைக்கும் என்பது நம்பிக்கை. அதை போல பெங்களூரில் பிராண சக்திகளை கொண்டுள்ள ஒரே ஆலயம் இது மட்டுமே ஆகும். இங்கு நிலவும் இன்னொரு நம்பிக்கை என்னவென்றால், கருவறை முன்பு ஒரு குகையாக இருந்ததாகவும் அதற்குள் இருந்த நகைகளை ஐந்து தலை பாம்பு காவல் காத்து வந்தது என்றும், திருடர்கள் உள்ளே நுழையாமல் இருக்க கதவுகள் சிறியதாக வைக்கப்பட்டு, குறைந்த அளவிலான வெளிச்சம் உள்ளே செல்லும் வகையில் அமைக்கப்பட்டது என்பதாகும்.

ஆலயத்தில் நுழைந்தவுடன் காணப்படுவது பகவான் வினாயகர் சன்னதி. அதன் எதிர்புறத்தில் உள்ளது பகவான் ஆஞ்சனேயர் சன்னதி. இவை இரண்டுமே பிரகாலத்தில் கட்டப்பட்டவை. அந்த இரு சன்னதிகளுக்கும் இடையே ஒரு மேல் தளத்தில் காணப்படுவது பகவான் சொக்கநாதர் சன்னதி. அதற்கு செல்லும் முன் காணப்படுவது ஒரு பெரிய மண்டபம். அதை தாண்டியதும் காணப்படுவது தியான மண்டபம். அங்குள்ள குறிப்பிட்ட இடத்தில் அமர்ந்து கொண்டு தியானம் செய்தால் அற்புதமான பலன் கிடைக்குமாம். அடுத்து சிறு நுழை வாயிலைத் தாண்டிச் சென்றால் உள்ளது பகவான் சொக்கனாதரின் கருவறை.

இந்த ஆலயம் சோழ மன்னர்களால் அன்று எலங்கா நாடு என கூறப்பட்ட இடத்தை கைப்பற்றி வெற்றி கொண்ட பின் கட்டப்பட்டது . சோழ மன்னர்கள் சிவபெருமான் பக்தர்கள் என்றாலும் ஆச்சர்யமாக இங்கு ஒரு பகவான் விஷ்ணுவின் ஆலயத்தை நிர்மாணித்து உள்ளார்கள்.

இந்த ஆலயத்தில் மிக அபூர்வமான காட்சி உள்ளது. மூலவர் சொக்கனாதர் மற்றும் அவருடைய மனைவிகளான ஸ்ரீ தேவி மற்றும்

பூ தேவி  என மூவர் சிலைகளும் நேபாளத்தில் கண்டகி நதியில் இருந்து கொண்டுவரப்பட்ட சாலிகிராமத்தில் செய்யப்பட்டவை. பொதுவாகவே சாலிகிராமத்தை வைஷ்ணவர்கள் விஷ்ணு பகவானின் அம்சமாக வணங்குவார்கள். முதலில் ஸ்ரீ தேவியின் சிலையின் மூக்கு உடைந்து விட்டதினால் வேறு சிலை செய்யப்பட்டு வைக்கப்பட்டதாம். அதை போலவேதான் பூதேவியின் சிலையும் பழுதடைந்து  விட்டதினால் வேறு சிலையை செய்து வைத்து உள்ளார்கள்.  அங்கு மூவரின் சிலைகளையும் கொண்ட உற்சவ மூர்த்திகளும் உள்ளனர். சனிக்கிழமைகளில் மூலவருக்கு திருமஞ்சன உற்சவம்  செய்யப்படுகின்றது. திருமஞ்சனம் என்பது சிலையை நறுமண எண்ணை கொண்டு ஸ்நானம் செய்வது  ஆகும். இந்த ஆலயத்தின் கீழே ஒரு பாதாள அறை இருந்ததாகவும் அது தற்போது மூடப்பட்டு விட்டதாகவும் கூறுகின்றார்கள்.

அந்த ஆலயத்தில் பிராகாரத்தில் பிரதர்ஷனம் செய்யும்போது ஐந்து இடங்களை வெள்ளை வண்ணத்தில் கட்டமிட்டு வைத்து உள்ளார்கள். அவற்றில் நின்றுகொண்டு தியானம் செய்தால் உடலுக்கு தேவையான அதிக அளவு பிராணவாயு கிடைக்குமாம். இந்த ஆலயத்தை தள்ளி  சில மீட்டர் தூரத்தில் ஒரு ஆஞ்சனேய பகவான் ஆலயம் உள்ளது. ஒரு நேர் கோடு வரைந்தால் அந்த பகவானின் தலை பகுதி சொக்கனாத பகவானின் காலடிக்கு கீழே உள்ள நிலையில் அமைக்கப்பட்டு உள்ளதாம்.

ஆலயத்தில் அற்புதமான ராமாயணக் காட்சிகளையும் வாலி சுக்ரீவ யுத்த காட்சிகளையும் செதுக்கி வைத்து உள்ளார்கள். தசாவதாரம் மற்றும் கோலாட்டக் காட்சிகள் ஆலய தூண்களில் செதுக்கப்பட்டு உள்ளன. ஆலயத்தின் இன்னொரு பகுதியில் கிரந்தம், தமிழ், மற்றும் கன்னட மொழிகளில் ஆலய சுவற்றில் செய்திகள் செதுக்கப்பட்டு உள்ளன. திராவிட கலைக்கு எடுத்துக் காட்டாக விளங்குவது இந்த

ஆலயத்தின் கட்டுமானம் . விஜயநகர கலையில் அற்புதமாக கட்டப்பட்டு உள்ளது ஆலய முகப்பில் உள்ள நவரங்கா மண்டபம் .
இன்று எலங்கா எனப்படும் இடம் அன்று ராஜேந்திர சோழ மன்னனின் சோழவள நாட்டில் 'இலைப்பாக நாடு' என்ற பெயரில் இருந்ததாம். டொமலூர் என்பது அன்று டோமலூர் மற்றும் தேசிமாணிக்கப்பட்டணம் என்ற பெயரில் இருந்ததாக கல்வெட்டு செய்திகள் கூறுகின்றன .

# Lord Chokkanathar Temple

## Santhipriya



**Imaginary view based on factual image**

Off Airport Road in Domlur is one of the oldest temples called Chokkanathar Swamy Temple, tucked in a by lane, not very far from the

main Domlur Road. The temple stands on a high base and probably is in the center of the locality and once a prominent structure. It is stated to be the 10th century temple build by the Cholas. The Chola Kings have constructed many temples for Lord Shiva and few for Lord Vishnu too one of which has been Chokkanathar temple in Bangalore. Chokka is usually the name of Lord Shiva, but the temple is Lord Vishnu's temple who is seated here as Lord Chokkanathar. Chokka in Telugu means beautiful and hence the Lord seated here is beautiful god.

The legend of the temple goes like this. A great Rishi once did intense penance at the present temple site to get the blessings of Lord Vishnu for the benefit of locals here. Pleased with his penance, Lord Vishnu appeared before him and commanded the Rishi to install a Divya Vigraha (Main Statue) so that the locals can regularly worship and fulfill their wishes. The people should also not forget to perform the final rites after death to attain moksha. Accordingly the Rishi ensured that the Main deity was installed at an elevated place in such a manner that the Main deity always receive the radiance of the cosmic energy and radiance from all eight directions at all times. The temple was constructed facing east so that the sun rays fall on the Main deity at sun rise during Uttharayana (End of February to first week of March) and Dakshinayana ( End of August to first week of September) respectively.

People who worship the Lord and carry out the circumambulation around the temple are blessed with his grace and get their wishes fulfilled. This is

the only temple in Bangalore possessing Pranic energy. Another popular belief is that the sanctum was earlier a cave and a five-headed snake used to guard its jewels. To keep thieves away, the doors were kept small and it was built in such a manner that minimum light was let into it.

Once you enter into the temple, you can see a small shrine of Lord Ganesha on the left hand side and another small shrine of Lord Anjaneya on the right side. Both have been added in later period. The sanctum of Lord Chokkanathar is found on elevated plain by the side of those two small shrines. The elevated building is inbuilt with three tier chambers one after the other. The first of the three is called Artha Mandap {Intermediary space between the temple exterior and the sanctum sanctorum}. The hall of Meditation follow the next, where three specific areas can be seen which according to the temple priest are meant for meditation which gives special energy. A small passage follow the meditation hall and finally the sanctum sanctorum where the Main Lord is seated.

The temple has been built by King Chola after conquering Yelahanka Nadu (now a part of Bangalore), which was a flourishing town in the then period of Chola regime. Though the Chola Kings were followers of Lord Shiva, it is unique that they have built this temple for the benefit of Vaishnavites.

The unique aspect of the temple is that the idols enshrined in the prime sanctum is Lord Chokkanathar, his consorts Goddess Sri devi and

Goddess Bhoo devi, all of whom have been made of Saligramas stone brought from river Gandagi of Nepal where divine Saligramas are found. The Saligramas stone is the most sacred stone worshipped by Vaishnavas. Goddess Bhoo Devi had a small chip off her nose. To correct this, the entire figure was scraped and another has been done. Similarly the same was done to the other consort Sri Devi too. There is also equally beautiful Utsava Murthy (Procession idols) of Chokka Narayana swamy with Sri and Bhoo Devi.

On Saturday special pooja called Thirumanjanam is performed. Thirumanjanam meaning expression of reverence to the divine by offering ceremonial bath with scented oil to the deities in the Vaishnavite temples in south India. It seems that there was a large basement hall below the sanctum, but it remains closed now.

As you come down from the sanctum of Lord Chokkanathar and circumambulate the temple, on the outer parameter you can find five specific spots which are marked in colour square. They are called Pranic energy points and when one stand on those points and meditate they can feel the increase in the Pranic energy. Just a furlong further is an Anjaneya temple and it is said that if a line is to be drawn the head of his deity is positioned beneath the feet of Lord Chokkanathaswamy.

The pillars have beautiful images carved on them some of which include scenes from Ramayana and the fight between Sugriva and Vali. The ten incarnations of Lord Vishnu –called Dasavathar- is found engraved in

the pillars of the temple. The pillars depict scenes of Kolatta (a play with sticks accompanied with singing and dancing) and demi gods. On one side of the temple wall is seen inscriptions on the temple in Granda, Kannada and in Tamil. The temple is rich in Dravidian architecture. The Vijayanagar style Navaranga pillars and the front mandap are architectural delights.

The whole of the Chola belongings of Bangalore were in the Illaipakka Nadu (present day Yelahanka) of Rajendra Solavala Nadu (Gangaikondachola). Domlur itself was earlier referred to as Tombalur and as Desimanikkapattanam in the inscriptions.